<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**OS.NO.**14/2021

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 02 ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 02.03.2026

**Pw**1 (சரோஜா)

**<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)</u>**

நான் பகலாயூரில் குடியிருக்கிறேன். தாவா சொத்திற்கும் நான் குடியிருக்கும் ஊருக்கும் சுமார் 1 கி மீட்டர் துரம் இருக்கும். தாவா சொத்தில் நான் வெள்ளாமை செய்து வருகிறேனா என்றால் வெள்ளாமை செய்து வருகிறேன். ஆடு, மாடுகள் மேய்த்து வருகிறேன். நான் வெள்ளாமை செய்து வருவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் குடியிருக்கும் வீடு உள்ளது, அது நீங்கலாக வேறு சொத்துக்கள் இல்லை. தாவா சொத்திற்கான விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் யாரும் சொல்லவில்லை, எனது சொத்து எனக்கு வேண்டும். தாவா தாக்கல் செய்த பின் வழக்கின் விசாரணைக்கு நான் ஆஜராகி வருகிறேன். நானாக தான் இன்று நீதிமன்றத்திற்கு வந்தேன், என்னுடன் யாரும் வரவில்லை. என் கணவர் பெயர் ராசப்பன். பிரதிவாதி ரேணுகாதேவி எனது தம்பி மகள். என் தம்பி பெயர் சுப்பிரமணியம். சுப்பிரமணியத்திற்கு 3 மகள்கள். அவர்கள் பெயர் சாந்தி, ரேணுகாதேவி மற்றும் ஈஸ்வரி. சாந்தியின் கணவர் பெயர் தெரியுமா என்றால் எனக்கு போக்குவரத்து இல்லை, அதனால் தெரியாது. ஈஸ்வரியின் கணவர் பெயர் தங்கராசு. என் கணவர் ராசப்பனுக்கு விஜயபுரி கிராமத்தில் சுமார் 2 ஏக்கர் கிரயம் மூலம் பாத்தியப்பட்டிருந்தது. நான் தங்கராசுவிற்கு ஒரு சொத்தை கிரயம கொடுத்துள்ளேன் என்றால சரிதான். அவருக்கு ரீச 208/1 மற்றும் 2 ல் ஏக்கர் 1.98-1/2 ல் ஏக்கர் 0.99-1/4 பொதுவில் கிரயம் கொடுத்துள்ளேன். 23.01.2014 தேதியில் அவ்வாறு கிரயம கொடுத்தேன். அந்த ஆவணம் ஊத்துக்குளி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 161/2014 என பதிவு செய்யப்பட்டுள்ளது

என்றால் சரிதான். அந்த கிரய பத்திரம் தான் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **பிசாஆ 1.** நான் தங்கராசுக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரயத்திற்கு சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுள்ளேன் என்றால் சரிதான். சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நான் தங்கராசின் கிரய பத்திரத்திற்கு பதிவிற்கு சென்றபோது அங்கு பின்பற்றப்பட்ட நடைமுறைகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு சொத்தில் இருந்து வந்த வருமானம் நீங்கலாக வேறு வருமானம் இல்லை என்றால் சரி. எனக்கு நிரந்தர வருமான வரி கணக்கு அட்டை உள்ளதா என்றால் அதை பார்த்தால் தான் தெரியும். எனக்கு எந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் யூனியன் வங்கி, விஜயமங்லத்தில் கணக்கு உள்ளது. அதில் வரவு செலவு செய்து வருகிறேனா என்றால் என்னிடம் பணம் உள்ளபோது அதில் போடு்வேன், திரும்ப எடுத்துக கொள்வேன். 2014 ல் ஒரு தனி நபரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிசாஆ 1 கிரயத்தில் கண்டுள்ள கிரயத் தொகை ரூ.7,94,500/-க்கு வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த தொகையை நான் வங்கியில் எனது கணக்கில் செலுத்தினேனா என்றால் இல்லை. நான் தங்கராசுவிற்கு கிரயம் ஏற்படுத்திக் கொடுத்த பிசாஆ 1 கிரயமும், தாவா சொத்தும் இணை பூமி என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை எனது சகோதரரின் இரு மகள்களுக்கு பிரித்து எழுதி கொடுத்தேன் என்றால் யாருக்கும் கொடுக்கவில்லை, தங்கராசுவிற்கு தான் கொடுத்தேன். 2015 ம் ஆண்டு நான், தங்கராசு,சுப்பிரமணி மற்றும் மாராயி ஆகியோர் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் ஆமாம். அந்த ஆவணம் ஊத்துகுளி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 3879/2015 என பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணம்தான் என்னிடம் காண்பிக்கப்படுவது. அந்த ஆவணம் **பிசாஆ 2.** பிசாஆ 2 ல் கண்டுள்ள விவரங்கள் சரியானவை தான். அப்போதும் அந்த ஆவணத்தின் பதிவிற்கு நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று சார் பதிவாளர் பதிவு நடைமுறைகளை தெரிந்து தான் நான் ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். சார் பதிவாளர் அலுவகலத்தி நான் இரண்டு முறை சென்றுள்ளேன் என்றும் எனக்கு சார் பதிவாளர் அலுவலகத்தில் பின்பற்றப்படும் பதிவு நடைமுறைகள் எனக்கு தெரியும் என்றால் மேற்படி இரு ஆவணங்கள் பதிவிற்கு நான் சென்றுள்ளேன். இன்றைய தேதி வரை வருவாய்

துறை ஆவண நடவடிக்கைகளுக்கு ஆட்சேபணை எதுவும் எழுத்து மூலமாக கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் என் தம்பியின் ஒரு மகளுக்கு ஆவணம் எழுதி கொடுத்துவிட்டேன். மற்றொரு மகளுக்கு ஆவணம் எழுதிக் கொடுக்கும் எண்ணம் இருந்ததா என்றால் இல்லை. இன்றைய தேதியில் பெருந்துறை சார்பு நீதிமன்றத்தில் அவ 14/21 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது, அதனால் சொத்திற்குள் யாரும் நுழையக் கூடாது என பெரிய பலகை வைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் தங்கராசுவிற்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரய சொத்தில் அவர் வீடு மற்றும் குடோன் கட்டியுள்ளார் என்றால் சரி. தங்கராஜ் வீடு மற்றும் குடோன் கட்டும்போது ரேணுகாதேவிக்கு பாத்தியப்பட்ட சொததிலும் சேர்த்து கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. ரேணுகாதேவி சொத்தையும் சேர்த்து தங்கராஜ் கட்டிடங்கள் கட்டியதை கேட்டதால் தான் தங்கராஜ் துண்டுதல் பேரில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 04.01.2018 தேதியில் நான் ஊத்துக்குளி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். அங்கு ஆவணம் தயார் செய்து வைக்கப்பட்டிருந்தது என்றும், எனது ஒப்புதல் பேரில் ஆவணத்தை சார் பதிவாளர் பதிவு செய்து கொடுத்தார் என்றால் சரியல்ல. சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளில் நான் கைரேகை வைத்தேனா என்றால் வைத்தேன், ஆனால் மோசடி செய்வார்கள் என்று எனக்கு தெரியாது. சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணத்தின் தன்மை மற்றும் விவரம் குறித்து எனக்கு படித்துக காண்பிக்கப்பட்டு, அதை நான் ஒப்புக்கொண்ட பின் தான் ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றும் தற்போது வழக்கிற்காக நான் அதை மறுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சார் பதிவாளர் அலுவலகத்தில் என்னை மோசடி செய்து ஆவணம் பதிவு செய்து கொண்டார்கள் என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அந்த புகார்தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்கள் நீதிமன்றத்தில் பார்த்துக கொள்ளுமாறு சொல்லிவிட்டார்கள். சார் பதிவாளரை இந்த வழக்கில் நான் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் கிரய பத்திரத்தில் உள்ள சாட்சிகள் செல்வபாரதி மற்றும் சாமிநாதன் ஆகியோருக்கும் எனக்கும் விரோதம் எதுவுமில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரயத்திற்கு உறவு முறை காரணமாக கிரயத் தொகை என்னிடம் ரொக்கமாக கொடுக்கப்ப்டடது என்றும் அதை நான் பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் உரிய

பிரதிபலனை பெற்றுக் கொண்டு கிரயம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு வழக்கிற்காக கிரயத் தொகை எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் கிரயப் பதிவு ஏற்பட்ட தேதி முதல் தற்போது வரை மேற்படி கிரயம் குறித்து எவ்வித ஆட்சேபணையும் புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்குமூலததில் பிரதிவாதி பிரச்சினை செய்த வழக்கு மூல தேதி 05.12.2020 என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 05.12.2020 கோவிட் தொற்று காரணமாக லாக்டவுன் நடைமுறையில் இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. 5.12.2020 அன்று லாக்டவுன் அமலில் இருந்தது என்றும் நான் சொல்லியுள்ள வழக்கு மூல தேதி தவறானது என்றால் சரியல்ல. 04.1.2018 தேதியிட்ட கிரய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். நான் 4.1.2018 லிருந்து 3 ஆண்டுக்குள் எனது கிரயத்தை ஆட்சேபித்து வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் அவ்வாறு நான் வழக்கு தாக்கல்செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 3 ஆண்டுகள் முடிந்த பின் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்கு கால வரையறை சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.03.02 16:12:09 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS